ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
| திகதி | 2022.08.16 |

## இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரால் மேற்கொள்ளப்பட்ட அறிக்கைகளைத் தொடர்புபடுத்தி பல்வேறு இணையத்தளங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் வெளியிடப்பட்ட தவறான செய்தி

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் நந்தலால் வீரசிங்க அவர்கள் மூலம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டதாக கூறப்படுகின்ற கட்டுரையொன்றின் சிங்கள மொழிபெயர்ப்பு இந்நாட்களில் இணையத்தளங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் வெளியிடப்பட்டு வருகின்றது.

எடுத்துக்காட்டாக, **"பணவீக்கம் என்பது பிரச்சனையொன்றல்ல ஆனால் தீர்வொன்றாகும்…… இப்பொருளாதார நெருக்கடி எங்களுக்கேற்பட்ட சிறந்த விடயமொன்றாகவிருக்கலாம் - மத்திய வங்கியின் ஆளுநர் கூறுகின்றார்"** என்ற தலைப்பின் கீழ் அல்லது இதேபோன்ற தலைப்புகளின் கீழ் கட்டுரைகள் அண்மையில் சமூக வலைத்தளங்களில் பரந்தளவில் வெளியிடப்படுகின்ற பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

முனைவர் நந்தலால் வீரசிங்க அவர்களின் பெயரில் வேறு தனிப்பட்டவர்களால் எழுதப்பட்ட **"பணவீக்கம் என்பது பிரச்சனையொன்றல்ல ஆனால் தீர்வொன்றாகும்"** என்ற தலைப்பிலான கட்டுரைக்கு அல்லது அதன் உள்ளடக்கங்களுக்கு முனைவர் நந்தலால் வீரசிங்க அவர்களோ அல்லது இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பல்ல என்பது பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.